**தனமல்வில பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தனமல்வில பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனமல்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இருப்பு பெறுமதியிடல் வருமானத்தை இனங்காணல் மற்றும் நடைமுறை வேலை போன்ற வேலைப் பெறுமதிகளிலும் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இருப்புப் பெறுமதியிடல் வருமானத்தை இனங்காணல் மற்றும் நடைமுறை வேலை கணக்கீடு செய்யும் கொள்கையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பிரதேச சபைக்குரிய கட்டிடங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் செலவினம் ரூபா 2,603,676 தொகை காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கிலும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்பு ஆகிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த பெறுமதியை 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கட்டிடங்களை மேம்படுத்தும் செலவினம் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்குகளுடன் சேர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த பிரதேச சபை தற்போது பயன்படுத்துகின்ற ரூபா 2,154,642 ஆன 15 உபகரணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்படாமையால் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமான பங்களிப்பு ஆகிய கணக்குகளில் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள மூலதனச் செலவினத்தின் வேறுபாடு சீராக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபையால் பயன்பாட்டிற்கு எடுக்கும் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பாவனைப் பொருள் இருப்பு ரூபா 253,572 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டமையால் இருப்பு மற்றும் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான இருப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 4,612,863 பெறுமதியுடைய நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அழிவடைந்திருந்த போதும் அவை நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட மையால் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் அப்பெறுமதிக்கு போலியான சொத்தொன்று உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | முறையான அங்கீகாரமொன்றின் கீழ் புத்தகப் பெறுமதி ரூபா 4,612,863 தொகையைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 2022 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கீட்டுத் தவறினைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆழிவடைந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதியை முறையாக கணக்குகளில் இருந்து பதிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 1,083,100 கூட்டுத்தொகையான நிர்மாணம் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாமையால் அப்பெறுமானத்தால் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் பங்களிப்பு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ரூபா 1,083,100 நிலையான சொத்துக்கள் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் இவ்வாறான தவறுகள் இடம் பெறாதிருப்பதை உறுதிப் படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான அனைத்துக் கட்டிடங்களும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | முன்னைய ஆண்டில் தவறுதலாகப் பதிவிடப்பட்டிருந்த ரூபா 503,915 ஆன கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் போது சீராக்கப்படாமையால் கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதியம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குறித்த தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் மீண்டும் இவ்வாறாள தவறுகள் இடம் பெறாதிருப்பதை உறுதிப் படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் அறவிடப்பட வேண்டிய மீதிகள் பதிவழிக்கக் கூடாது. |
| (ஏ) | ரூபா 3,217,154 ஆல் இறுதி வருமானம் கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மிகை மற்றும் பெற வேண்டிய வருமானம் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்கள் பரீட்சிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உள்ளவாறான நிலுவையை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும |
| (ஐ) | மீளாய்வாண்டின் நிதிநிலைமைக் கூற்றில் நானாவித வைப்புக்கள் மீதி ரூபா 7,107,781 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வைப்புப் பதிவேட்டுடன் ஒப்பிட்டு 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் குறித்த தவறினைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான வைப்பு மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | முன்னைய ஆண்டில் நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,722,101 தொகை மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 50,149 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மிகை மற்றும் நிலுவை வருமானம் அந்த அளவினால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடப்பாண்டின் பெறுவனவு ஒன்றாக பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 1,692,686.05 ஆன நிலுவைப் பெறுவனவுகள் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய சரியான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஓ) மூலதனச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்படும் பௌதிக சேவை மற்றும் பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்ட செலவின பேரேட்டின் பிரகாரம் முறையே ரூபா 40,066,460 தொகை மற்றும் ரூபா 10,766,156 ஆக இருந்த போதும் நிதிநிலைமைக் கூற்றில் அது முறையே ரூபா 36,018,299 மற்றும் ரூபா 9,860,032 என உள்ளடக்கப்பட்டமையால் மூலதனச் செலவினம் ரூபா 5,154,285 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,094,688 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,177,394 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) டங்குவ வாரச்சந்தைக்கு அருகே 7 முதல் 12 ஆம் இலக்கம் வரையான கடைகளுக்காக நிலுவை கேள்வித் தொகை ரூபா 4,766,900 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | விரைவில் கடைகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். | நிலுவை கேள்வித் தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கணிப்பீடுகளில் இனங்காணப்பட்ட 111 பெயர் பதாதைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 655,420 அறவிடப்பட்டிருக்கவில்லை. | விளம்பர அறிவித்தல், பதாகைக் கட்டணங்களை அறவிடுவதற்காக உரிய நிறுவனங்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | நிலுவை பதாதைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் 200 கனமீற்றருக்கு மேற்பட்ட அளவில் குறுனிக் கற்கள் இட்டு, நிர்மாணிக்கப்பட்டிருந்த 12 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு உரிய போக்குவரத்து விடயத்துக்காக கொடுப்பனவு செய்யும்போது 200 கன மீட்டர் குருனிக் கற்களுக்கு குறைந்த நிர்மாணங்களுக்கு உரிய விகிதத்தைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்தமையால் ரூபா 1,404,757 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அபிவிருத்தி செய்யும் போது கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த நிர்மாணங்கள் தொடர்பாக பிரதேச சபையின் முன்னால் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரமொன்று வழங்கப்பட்டு முறையான பரிசோதனை ஒன்று தற்போது நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அபிவிருத்தி செய்யும் போது கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த நிர்மாணங்கள் தொடர்பாக இப்பிரதேச சபையின் முன்னால் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரமொன்று வழங்கப்பட்டு முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை ஒன்று தற்போது நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த 3 வீதி கொங்கிறீட் இடும் செயற்திட்டங்களில் அளவீட்டுப் பத்திரம் மற்றும் வேலை நிறைவு அறிக்கையின் பிரகாரம் வீதியின் உயரம் ஆறு அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் வீதி பௌதிக பரிசோதனையின் போது அதன் உயரம் 05 அங்குலமாக இருந்ததால் ரூபா 407,494 தொகை கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீதி எதிர்பார்த்த நிலைமையில் நிர்மாணிக்கப்படாது இருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாகப் பரீட்சிக்கப்பட்டு குறித்த உத்தியோகத்தரிடமிருந்து கூடுதலாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை மீண்டும் அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | முன்னைய ஆண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த சந்தகலகம சனசமுக மண்டபத்தின் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 406 நாட்கள் தாமதமாக இருந்த போதும் அதற்காக தாமதக் கட்டணங்களை அறவிடும் போது ரூபா 154,299 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | | சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை மீண்டும் அறவிடப்பட வேண்டும். |